# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213051

1. District மாவட்டம் : திருச்சி   PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு   Year: ஆண்டு 2023   FIR No.. மு.த.அ. எண் 13   Date: நாள் 07.09.23

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் -1988 (திருத்தம் 2018)   Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 05.09.23   Date to : நாள் வரை
Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 1400 Hrs.   Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.09.23   Time : நேரம் 19.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலமாக (கணினி தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்   21 கி.மீ வடகிழக்கே
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி   சென்னை பைபாஸில் உள்ள அரியலூர் சத்திய மாலத்தின் அருகில்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தி. ரமேஷ்மோர்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரைராஜ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24.09.72   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் செல் போன் கடை உரிமையாளர்   (g) Address : முகவரி கதவு எண் 97, 8 வது தெரு, சக்தி நகர் ராக்கோத் அவையன்பேட்டை, கல்பாளையம் மண்ணச்சநல்லூர் (TK), திருச்சி Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. கருப்பையா, பால்கா சூப்பர்வைசர், கல்பாளையம் பால்கா, மண்ணச்சநல்லூர் (Tk), திருச்சி Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில தாமதம்

இராதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில்
இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Rameshkumar 7/9/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 7/9/23

15. Date & Time of despatch to the court: 07.09.23
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Balamurugan
Rank: நிலை Inspector of Police, VEAT, Trichy No. எண் ……….

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2023-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 07.09.2023 பணியில் இருந்த போது மாலை 19.00 மணியளவில் திருச்சி -621005, மண்ணச்சநல்லூர் வட்டம், கல்பாளையம், விக்னேஷ் அவென்யூ, சக்திநகர், 8 வது தெரு, பிளாட் எண்.97 வசிக்கும் துரைராஜ் மகன் ரமேஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுகா, கல்பாளையம் பிர்கா சர்வேயர் திரு.கருப்பையா மற்றும் புகார்தாரர் திரு.ரமேஷ்குமார் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 07.08.2023 இரவு 20.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.13/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் D.ரமேஷ்குமார், த/பெ.துரைராஜ், பிளாட் எண்.97, 8 வது தெரு, சக்திநகர், விக்னேஷ் அவென்யூ, கல்பாளையம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி-621005. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. அய்யா, நான் திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, கல்பாளையம், விக்னேஷ் அவென்யூ, சக்திநகர், 8வது தெருவில் பிளாட் எண்.97ல் வசித்து வருகிறேன். நான் திருச்சி, திருவானைகோவிலில் அபிராமி மொபைல்ஸ் என்ற பெயரில் செல்போன் மற்றும் உதிரிபாகங்கள் விற்பனை கடை நடத்தி வருகிறேன். நான் 18.1.2013 அன்று ஜெயகுமார் என்பவரிடமிருந்து திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கல்பாளையம் கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண்.69/4, 69/5-ல் உள்ள சக்திநகர் விக்னேஷ் அவென்யூ, மனை எண்.97 சதுரடி 1200 கொண்ட காலிமனையினை வாங்கி மண்ணச்சநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் ஆவண எண்.242/2013-ன்படி எனது பெயருக்கு பதிவு செய்தேன். பின் 2014 ஆம் ஆண்டு அந்த இடத்தில் சுமார் 745 சதுரடியில் வீடு கட்டி அதில் குடியிருந்து வருகிறேன். எனது செல்போன் கடையை விரிவுபடுத்த பணம் தேவைப்பட்டதால், வங்கியில் லோன் பெற எனது வீட்டின் சரவே எண்களான 69/4A1A, 69/5A உள்ள பட்டாவை சப்டிவிசன் செய்து எனது பெயருக்கு தனிப்பட்டா வழங்க ஆன்லைன் மூலம் 13.7.2023 அன்று விண்ணப்பித்திருந்தேன். ஒரு மாதமாகியும் எனது விண்ணப்பம் தொடர்பாக எனக்கு எந்த தகவலும் கிடைக்காத காரணத்தால், நான் 28.8.2023 அன்று மண்ணச்சநல்லூர் சர்வே அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது எங்களது பகுதிக்குண்டான கல்பாளையம் பிர்கா சர்வேயர் திரு.கருப்பையா அங்கு இல்லாததால் அவருக்கு போன் செய்து, எனது மனுவின் நிலைகுறித்து அவரிடம் கேட்ட போது, அவர் உங்கமனு என்னிடம் தான் இருக்குது, எனக்கு சர்வே செய்ய வேண்டிய வேலைகள் நிறைய பெண்டிங்ல இருக்கு, ஒரு வாரம் கழிச்சி

போன்ல பேசுங்க என்று சொன்னார். அதன்பேரில் நான் 5.9.2023 அன்று காலை அவருக்கு போன் செய்தேன். அப்போது அவர் என்னிடம், நான் சமயபுரம் பகுதியில் வேலையா இருக்கேன் மதியானம் சுமார் 2 மணிக்கு சமயபுரம் சென்னை பை பாஸில் உள்ள அரியலூார் புதிய பாலத்தின் பக்கத்துல வந்து வெயிட் பண்ணுங்க. நான் வந்திடுரேன் என சொன்னார். அவர் சொன்னதுபோல், நான் மதியம் 2 மணிக்கு சென்னை பை பாஸில் உள்ள அரியலூார் புதிய பாலத்தின் அருகே சென்று அவரது வருகைக்காக காத்திருந்தேன். அப்போது அங்கு வந்த பிர்கா சர்வேயர் திரு.கருப்பையாவிடம், கடைக்கு லோனுக்காக, சப்டிவிஷன் பண்ணிபட்டா கேட்டிருக்கேன் சார், எப்ப சார் சப்-டிவிஷன் செஞ்சி கொடுப்பீங்க என கேட்டேன். அப்போது, அவர் என்னிடம், உங்களுடைய வீட்டுக்கு சப்டிவிசன் செஞ்சி கொடுக்க எனக்கு 6000 ரூபாய் கொடுத்தீங்கன்னா, உங்க வேலையைசீக்கிரம் முடிச்சி கொடுத்திடுறேன் என்றதும், அதுக்கு நான் அவரிடம், ஏற்கனவே 800 ரூபா கட்டிட்டேனே சார், ஆறாயிரம் என்ன பீஸ் சார் என்று கேட்டேன். பீஸ் இல்ல, எனக்கு தனியா கொடுத்திடனும், நெறைய செலவு இருக்கு என்று சொன்னார். மீண்டும் நான் அவரிடம், எனக்கே வருமானம் இல்லைனுதான் கடைக்கு லோன் போடுறேன் சார், இப்ப என்னிடம் பணம் எதுவும் இல்லை சார், எங்கயாவது கடன் வாங்கித்தான் தரணும் சார் என்று சொன்னேன். அதற்கு அவர், இவ்ளோ சொல்ற, வேணும்னா 1000 ரூவா கம்மிபண்ணிகிட்டு 5000 ரூபாய் கொடுத்தீன்னா, உன் வேலைய சீக்கிரம் முடிச்சி தர்றேன், இல்லைன்னா என்னால உன்வேலைய முடிக்க முடியாதுப்பா என்று கறாராக சொல்லிவிட்டார். பிர்கா சர்வேயர் கருப்பையா கேட்ட லஞ்சப்பணத்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் சரிங்க சார், பணத்த ரெடி பண்ணிட்டு, ரெண்டு நாள்ல உங்கள வந்து பார்க்கிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா கல்பாளையம் பிர்கா சர்வேயர் திரு.கருப்பையா மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துடன் பாரதஸ்டேட் வங்கியில் 13.7.2023 அன்று எனது இடத்திற்கு சப்டிவிஷன் செய்வதற்காக 800 ரூபாய் செலுத்திய ரசீது மற்றும் எனது விண்ணப்ப எண்.2023/0105/15/263721 தொடர்பான மனு ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd.xxx (Rameshkumar)7/9/2023 Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 19.00 Hrs., on 07.09.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.13/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 20.30 Hrs., on 07.09.2023. Sd.xxx (K.Balamurugan)7/9/2023 Inspector of Police, V&AC, Trichy.

7/9/23
(K.Balamurugan)
Inspector of Police,
V&AC, Trichy.